சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No. 60 / 2017

வாதி / பிரதிவாதி வா.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.தேன்மொழி அவர்களால் 44/1969 பிரிவின்படி 22.08.2022 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வைரன் | கிராமம் | : |
| த/பெ | : முத்துசாமி | வட்டம் | : |
| மதம் | : | தொழில் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை

நான் கிருஷ்ணராயபுரத்தில் வசித்து வருகிறேன். இந்தநீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்தததின் பேரில் நான் இன்று ஆஜராகியுள்ளேன். இந்த வழக்கின் வாதி பிரதிவாதிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது வா.சா.ஆ.5. மேற்படி கையெழுத்து நான் 21.03.2012 அன்று கிருஷ்ணராயபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து போட்டேன். நான் கையெழுத்து போட்ட மேற்படி பத்திரம் ஈட்டுக்கடன் பத்திரமமாகும். முருகேசன் மற்றும் அவரது அப்பா ராஜலிங்கம் சிதம்பரத்திடம் பெற்ற கடனுக்காக மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்டது. என்னை சாட்சி கையெழுத்து போட முருகேசன் அழைத்ததின் பேரில் நான் சென்றேன்- இந்த வழக்கின் வாதி சிதம்பரம் எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். மேற்படி 21.03.2012 தேதியில் வாதி சிதம்பரத்திடம் ராலிங்கமும் முருகேசனும் சேர்ந்து ரூ.2,00,000 குடும்பச் செலவிற்காக கடனாக பெற்றுக்கொண்டார்கள். மேற்படி தொகைக்கு ரூ.100 க்கு ரூ.2 வட்டி என மாதம் ஒன்றிற்கு பேசிக் கொண்டார்கள். மேற்படி ஆவணத்தில் கிருஷ்ணராயபுரத்தை சேர்ந்த ரத்தினம் என்பவரும் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் அவரை வாதி சிதம்பரம் அழைத்து வந்தார். மேற்படி ரத்தினம்

இறந்துவிட்டார். நான் சாட்சி கையெழுத்து சார்பதிவாளர் முன்னிலையில் போட்டேன். முருகேசன் ராஜலிங்கம் ஆகியோரும் சார்பதிவாளர் முன்னிலையில் தான் கையெழுத்து போட்டார்கள்.

ஒம் / வைரன்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.